

## விருதுநகர் தலித் அருந்ததியர் இளைஞர் சுரேஷ்
## மதுரை கரிமேடு காவல் நிலையத்தில் சித்ரவதை செய்து படுகொலை

## தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் சார்பில்

# கண்டன ஆர்ப்பாட்டம்

நாள் : 26.12.2011 காலை 10 மணி திங்கள்கிழமை - மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, மதுரை

**தலைமை** தோழர். S. **ஞானகுரு** B.A.,B.L,
மாவட்டச் செயலாளர், தீண்டாமை ஒழிப்பு முன்னணி, விருதுநகர்

**கண்டன உரை - தோழர்கள்**

**பா. விக்ரமன்** CPI(M)
மதுரை மாநகர் மாவட்டச்செயலாளர்

**A. சேகர்** CPI(M)
விருதுநகர் மாவட்டச்செயலாளர்

**M. தங்கராஜ்**
மாவட்டச்செயலாளர், தீ.ஒ.மு.மதுரை

**விடுதலை வீரன்**
அமைப்புச் செயலாளர், ஆதிதமிழர் பேரவை

**கு. ஜக்கையன்**
அமைப்பாளர், அருந்தமிழர் விடுதலை இயக்கம்

**M. முத்துக்குமார்**
மாவட்ட பொருளாளர் தீ.ஒ.மு.,விருதுநகர்

**R. ராஜகோபால்**
மாவட்ட தலைவர், தீ.ஒ.மு.மதுரை

**J.J. சீனிவாசன்**
சிபிஎம் நகரச் செயலாளர், விருதுநகர்

**R. பாலசுப்பிரமணியன்**
மாவட்டச் செயலாளர், ஊரகவளர்ச்சி சிஐடியு

**N. முத்துஅமுதநாதன்**
வழக்கறிஞர், தீ.ஒ.மு.மதுரை

**பூவை. ஈஸ்வரன்**
ஆதிதமிழர் பேரவை, விருதுநகர்

**L. முருகன்**
மாவட்டக்குழு, தீ.ஒ.மு.,விருதுநகர்

**R. விஜயபாண்டி**
ஊரக வளர்ச்சி சங்கம் - சிஐடியு

**உமா மகேஸ்வரி**
மாவட்டக்குழு, தீ.ஒ.மு.,விருதுநகர்

**நிறைவுரை** தோழர். R. **அண்ணாத்துரை** MLA
மதுரை தெற்கு தொகுதி

**தமிழக அரசே! மாவட்ட நிர்வாகமே!**

★ தலித் இளைஞர் சுரேஷை படுகொலை செய்த காவல்துறையினர் மீது குற்றவழக்கு மற்றும் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்!

★ பாதிக்கப்பட்ட சுரேஷின் குடும்பத்திற்கு ரூ. 5 லட்சம் நிவாரணம் வழங்கு!

★ உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையின் கீழ் விசாரணை நடத்திடு!

**ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக நடைபெறும் போராட்டத்தில் ஜனநாயக உள்ளம் கொண்ட அனைவரும் பங்கேற்பீர் - ஆதரவு தாரீர்!**

இவண் : தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி, விருதுநகர் மாவட்டக்குழு

ிவாசிக், விருதுநகர். செல் : 97860 63007

செப்-11, 2011 பரமக்குடி நோக்கி சாதி ஒழிப்புப் போராளி தியாகி இமானுவேல் நினைவிடத்திற்குச் சென்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பரமக்குடி, மதுரை, இளையாங்குடி ஆகிய இடங்களில் காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது. துப்பாக்கிச் சூடு நடத்துமளவிற்கு கலவரச் சூழல் எதுவும் இல்லை. இரு சமூகங்களுக்கிடையே மோதல் இல்லை. தங்களுக்குள்ளும் மோதல் இல்லை. பின் எதற்கு? செப்-11 காலை பரமக்குடி நோக்கி வர இருந்த தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜான்பாண்டியன் தூத்துக்குடியில் கைது செய்யப்படுகிறார். கேள்விப்பட்ட அவரது அமைப்பினர் பரமக்குடி ஐந்துமுனைச் சந்திப்பில் மறியலில் ஈடுபட்டனர். நினைவிடம் நோக்கி வாகனங்களின் போக்குவரத்து தடை செய்யப்படவில்லை. காவல்துறை கலைத்து விரட்டிய பின்னர் 12 மணி முதல் 4.30 மணிவரை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். எதற்காக?

மதுரை சிந்தாமணி அருகே பரமக்குடி நோக்கிச் செல்லவிருந்த வாகனங்களை தடுத்து நிறுத்தி மிகச் சிறிய குழுவினர் மீது தடியடி கூட நடத்தாமல் கஜேந்திரன் என்கிற காவல்துறை அதிகாரி கைத்துப்பாக்கியால் சுட்டுள்ளான். பரமக்குடி துப்பாக்கிச் சூட்டின் எதிரொலியாக இளையாங்குடியில் எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

தலைவர் ஜான்பாண்டியன் கைதும், பரமக்குடி, மதுரை, இளையாங்குடி துப்பாக்கிச் சூடுகளும் 'ஜெ' அரசின் திட்டமிட்ட செயல்! தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா தனது உரையில் துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தி, சாதிக் கலவரத்தைத் தூண்டும் விதத்தில் பேசியதன் நோக்கம் என்ன? 2010-ஆம் ஆண்டு தியாகி இமானுவேல் நினைவிடத்தில் அ.தி.மு.க சார்பில் 'ஜெ' யால் அனுப்பப்பட்ட தலைவர்கள் மக்கள் மத்தியில் " அம்மா 2011 ல் ஆட்சிக்கு வந்தால் தியாகி இமானுவேல் நினைவு நாளை அரசு விழாவாக அறிவிப்பதாக 'அம்மா' சொல்லச் சொன்னதாக " அறிவித்துள்ளனர். பதவியிலமர்ந்த 'ஜெ' 2011 செப்-11 தியாகி இமானுவேல் நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்காமல் தப்பிக்க உருவாக்கப்பட்ட திட்டமிட்ட செயலே கைது நடவடிக்கையும், துப்பாக்கிச் சூடுகளும்.

செப்-7 அன்று பரமக்குடியில் ' தேசியத் தலைவர் தெய்வத் திருமகன் இமானுவேல்' என விளம்பரப் பலகை வைக்கக் கூடாது என்று கலவரத்தை உருவாக்க முயற்சித்த ' மறத் தமிழர் சேனை ' என்கிற சாதிவெறி அமைப்பு தற்போது காவல்துறைத் தூண்டுதலால் பரமக்குடியில் தியாகி இமானுவேல் பேரவைத் தலைவர் சந்திரபோசு அவர்களை இழிவுபடுத்தி தொடர்ந்து சுவரொட்டி ஒட்டுகிறார்கள். நவம் - 5 கூட்டத்தில் பேசியதற்காக வழக்குப் போடும் காவல்துறை சாதிக் கலவரத்தைத் தூண்டுபவர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் வழக்குப் பதியாமல், சாதி வெறியர்களுக்குத் துணை நிற்கிறது.

துப்பாக்கிச் சூடு நடத்திய காவல்துறையை, 'ஜெ' அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்கள் இன்றுவரை பல்வேறு இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கூடங்குளம் அணு உலையை இழுத்து மூட வலியுறுத்தி நடைபெறும் மக்கள் போராட்டத்தை, மூன்று தமிழர் உயிர்காக்க மரண தண்டனையை ரத்து செய்ய வலியுறுத்தி நடைபெறும் போராட்டங்களை, மக்களை வாட்டி வதைக்கும் பேருந்துக் கட்டணம், பால் விலை, மின்சாரக் கட்டணம் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதை எதிர்த்து உருவாகும் போராட்டங்களை திசைதிருப்ப அரசும், அதிகாரிகளும் சாதிக் கலவரத்தைத் தூண்டுவதன் மூலம் மக்களைப் பிளவுபடுத்தும் சதியை தென்மாவட்டங்களில் அரங்கேற்ற முயற்சிக்கின்றனர். ஒன்றுபட்ட மக்களின் போராட்டங்களைப் பிளவுபடுத்த முயற்சிக்கும் 'ஜெ'அரசின் திட்டமிட்ட சதியை முறியடிப்போம்! துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க, காவல்துறை அதிகாரிகளுக்குத் தண்டனை கிடைக்க, ஒடுக்கப்பட்ட மக்களின் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், தமிழ்த் தேசிய இன அமைப்புகள், சமூக மாற்றத்திற்கான முற்போக்கு அமைப்புகள் ஓரணியில் அணிதிரள்வோம்! வாரீர்!

**சாதி ஒழிப்பிற்காக அணி திரள்வோம்! வாரீர்!**

# விருதுநகர் கைதி மதுரையில் சாவு
# போலீஸ் தாக்கி இறந்ததாக புகார்

## உடலை வாங்க மறுத்து உறவினர்கள் முற்றுகை

மதுரை, டிச.14: மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விருதுநகர் கைதி இறந்தார். போலீஸ் தாக்கியதில் இறந்ததாக கூறி அவரது உறவினர்கள் உடலை வாங்க மறுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

விருதுநகர் பழைய பஸ் ஸ்டாண்ட் பகுதியை சேர்ந்த முனியாண்டி மகன் சுரேஷ்(24). விருதுநகர் கட்டனார்பட்டியைச் சேர்ந்தவர் டேவிட்(30). கடந்த 5ம் தேதி இருவரும் மதுரை கரிமேடு பகுதியில் ஒரு வீட்டிற்குள் புகுந்து திருட முயன்றுள்ளனர். அப்பகுதியினர் 2 பேரையும் விரட்டினர். அவர்களிடமிருந்து தப்பிக்க 2 பேரும் வைகை ஆற்றுக்குள் குதித்து ஓடினர். ஓடும் போது கீழே விழுந்ததில் சுரேஷின் இடது கால் முறிந்தது. 2 பேரையும் விரட்டிப் பிடித்து பொதுமக்கள் கரிமேடு போலீசில் ஒப்படைத்தனர். போலீசார் டேவிட்டை சிறையில் அடைத்தனர். மதுரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சுரேஷ் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

போலீஸ் தாக்கியதாலேயே சுரேஷ் உயிரிழந்ததார் எனக் கூறி, போலீஸ் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும் வரை, சுரேஷின் உடலை வாங்க மாட்டோம் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து மதுரை அரசு மருத்துவமனையில் துணை கமிஷனர் திருநாவுக்கரசு தலைமையில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

ஆதித்தமிழர் பேரவை நகர் செயலாளர் ஆதவன் கூறுகையில், 'கடந்த 5ம் தேதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சுரேஷை சேர்த்தவர்கள், அவரது குடும்பத்தினருக்கு எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. அவர் இறந்த பிறகே தெரிந்துள்ளது. சிறையில் அடைக்கப்பட்டு மரத்திலிருந்து விழுந்ததாகவும், பொதுமக்கள் தாக்கியதாகவும், தப்பியபோது இடது கால் ஒடிந்து காயமடைந்ததாகவும் பல்வேறு தகவல்களை போலீஸ் தெரிவிக்கிறது. சுரேஷ் சாவில் மர்மம் இருக்கிறது. போலீசே அடித்து கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது' என்றார்.

ஜேஎம்2 மாஜிஸ்திரேட் உமா மகேஸ்வரி, மருத்துவமனை வந்து சுரேஷின் உறவினர்கள் மற்றும் போலீசாரிடம் நேரடி விசாரணை நடத்தினார்.

சுரேஷ் உடலை 3 டாக்டர்கள் கொண்ட குழுவினர் பிரேத பரிசோதனை நடத்தவும், பரிசோதனை முழுவதையும் வீடியோ எடுக்கவும் அவர் உத்தரவிட்டார். 15 நாட்களுக்குள் இந்த றிக்கையை போலீஸ் சமர்ப்பிக்க வேண்டும் என அவர் உத்தரவிட்டார். பின்னர் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு, ஆம்புலன்ஸ் மூலம் விருதுநகருக்கு சுரேஷின் உடல் அனுப்பி வைக்கப்பட்டது.